**சுருக்கம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் திட்ட பயனாளிகள் மற்றும் பொது மக்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் கோவிட்–19 சிகிச்சைக்கான கட்டணம் மாற்றி அமைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (அஉ_தி1–1) துறை

அரசாணை (நிலை) எண்.347

**நாள்: 09.08.2021**
**திருவள்ளுவராண்டு 2052**
**பிலவ, ஆடி – 24**

**படிக்கப்பட்டவை:**

1) அரசாணை (நிலை) எண் 240, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி1–1) துறை, நாள் 05.06.2020.
2) அரசாணை (நிலை) எண் 290, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி1–1) துறை, நாள் 03.08.2020.
3) அரசாணை (நிலை) எண் 433, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி1–1) துறை, நாள் 28.10.2020.
4) அரசாணை (நிலை) எண் 578, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி1–1) துறை, நாள் 29.12.2020.
5) அரசாணை (நிலை) எண் 251, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி1–1) துறை, நாள் 22.05.2021.

**மேலும் படிக்கப்பட்டது**

6) திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், கடித எண். 1887/ த.நாசுதி/ காப்பீடு–1/2021, நாள் 14.07.2021.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசு அனைத்து மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவச் சேவைகளை செயல்படுத்தி வருகிறது.

2. உலக சுகாதார அமைப்பு தற்போதுள்ள கோவிட் தொற்று பாதிப்பினை உலகளாவிய பொதுசுகாதார பேரிடராகவும், இது கட்டுப்படுத்தக்கூடிய நிகழ்வாகவும் அறிவித்துள்ளது. இதனடிப்படையில் தமிழ்நாடு அரசு பொது சுகாதார திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் கோவிட்–19 தொற்று பட்டியலிடப்பட்ட நோயாக அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் கோவிட்–19 தொற்று பரவலைத் தடுக்கும் நோக்குடன் பெருவாரியாக பரவும் தொற்றுச்சட்டம் 1897–ன் படி வழிகாட்டு வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைச்சட்டம் 2005–இன்படியும், கோவிட்–19 தொற்று முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு வழிகாட்டு முறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே 5-ல் படிக்கப்பட்ட அரசாணையில் மக்கள் நலன் காத்திடவும், கட்டணமில்லா சிகிச்சை வழங்கிடவும், கோவிட்-19 சிகிச்சைக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட கட்டணத் தொகையானது இரண்டு மாதங்களுக்குள் தொற்றின் தன்மைக்கேற்ப மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

4. மேலே ஆறில் படிக்கப்பட்ட தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தில் 12.07.2021 அன்று நடைபெற்ற உயர்மட்ட சிறப்பு குழு கூட்டத்தில் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் கோவிட்-19 சிகிச்சைக்கான அதிகரிக்கப்பட்ட தொகையானது இரண்டு மாதங்களுக்கு பின்பு தொற்றின் தன்மைக்கேற்ப கட்டணத்தை மாற்றுவது குறித்து மறுபரிசீலனை செய்யப்பட்டது என தெரிவித்து உயர் மட்ட சிறப்பு குழு கூட்டத்தின் தீர்மானங்களின் படி கருத்துருவினை அரசிற்கு சமர்ப்பித்துள்ளார்.

5. மேற்காணும் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரீசீலனை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

i. குறைந்து வரும் கோவிட் தொற்றினை கருத்தில் கொண்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கோவிட்-19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம் நாளொன்றுக்கு (Per Day Cost) என்ற கட்டணத்திலிருந்து தொகுப்பு கட்டணமாக (Package Cost) கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது

<u>மாற்றியமைக்கப்பட்ட தொகுப்பு கட்டண அட்டவணை</u>

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.251, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (உ-அதி1-1) துறை, நாள்: 22.05.2021 உள்ள சிகிச்சைக் கட்டணம் | | முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் | |
|---|---|---|---|---|
| | சிகிச்சை வாரியாக | சிகிச்சைக் கட்டணம் (நாளொன்றுக்கு) | சிகிச்சை தொகுப்பு விவரம் | சிகிச்சை தொகுப்பு கட்டணம் (Package cost) |
| 1. | தீவிரமில்லாத கோவிட் 19 சிகிச்சை | ரூ.5,000 | CM01600-B-I: தீவிரமில்லாத கோவிட் 19 | ரூ.3,000 |
| 2. | தீவிரமில்லாத கோவிட் 19 சிகிச்சை ஆக்ஸிஜனுடன் | ரூ.15,000 | CM01600-B-II: ஆக்ஸிஜனேற்றப்பட்ட தீவிரமில்லாத கோவிட் 19 | ரூ.7,500 |
| 3. | வென்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை பிரிவு | ரூ.35,000 | CM0523 : கடுமையான சுவாச செயலிழப்பு (வென்டிலேட்டருடன்) | ரூ.56,200 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | CM0988 :தீவிர சிகிச்சை பிரிவு பராமரிப்பு (சுவாசக்கோளாறு / உணர்விழந்த முழு மயக்க நிலை/ பல உறுப்புகள் செயலிழப்பு / செப்டிக்ஷாக் / வென்டிலேட்டருடன். | ரூ.31,500 |
| 4. | வென்டிலேட்டர் அ்ல்லாத தீவிர சிகிச்சை பிரிவு | ரூ.30,000 | CM0522 : கடுமையான சுவாச செயலிழப்பு (வென்டிலேட்டர் இல்லாமல்) | ரூ.27,100 |
| | | | CM0960: செப்டிக்ஷாக் (தீவிரசிகிச்சைபிரிவு) | ரூ.43,050 |
| 5. | தீவிர சிகிச்சை பிரிவு | ரூ.25,000 | CM0522 : கடுமையான சுவாச செயலிழப்பு (வென்டிலேட்டர் இல்லாமல்) | ரூ.27,100 |
| | | | CM0960: செப்டிக் ஷாக் (தீவிரசிகிச்சைபிரிவு) | ரூ.43,050 |

ii. கீழ்காணும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகிறது:

| **அரசாணை (நிலை) எண்.251, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 22.05.2021-ல் உள்ள வழிகாட்டு நெறிமுறைகள்** | தற்போதைய வழிகாட்டு நெறிமுறைகள் |
|---|---|
| நகர அடுக்குகளின் அடிப்படையில் அமைந்துள்ள மருத்துவ மனைகளுக்கான கூடுதல் கட்டணம் | **மருத்துவமனைகளுக்கு ஏற்கனவே முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் நடைமுறையில் உள்ள விதிகளின்படி கட்டணம் வழங்கப்படும்.** |
| கோவிட்-19 தொற்றுக்கான கூடுதல் பராமரிப்பு கட்டணங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் | **கோவிட்-19 தொற்றுக்கு தற்போது நிர்ணயிக்கப்படும் கட்டணத்துடன் நாளொன்றுக்கு பாதுகாப்புகவசம்/ உயர்தர** |

| | |
|---|---|
| சேர்க்கப்பட்டுள்ளது. (PPE suits/ high end antibiotics/high end investigations) | **மருந்துகள் மற்றும் பரிசோதனைகளுக்கான கட்டணம் கூடுதலாக வழங்கப்படும்.** (PPE suits/ high end antibiotics / high end investigations ) |
| D-Dimer, IL6 , LDH போன்ற பரிசோதனைகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் கூடுதலாக வழங்கப்படும். | D-Dimer, IL6 , LDH போன்ற பரிசோதனைகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் கூடுதலாக வழங்கப்படும். |
| Remdesivir, Tocilizumab, itolizumabetc போன்ற மருந்துகளுக்கு கூடுதல் கட்டணம் திட்டத்தின் கீழ் கூடுதலாக வழங்கப்படும். | கோவிட்-19 சிகிச்சை பெறுவதற்கான உயர்தர மருந்துகளுக்கு கூடுதல் கட்டணம் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக வழங்கப்படும். |
| கோவிட்-19 சிகிச்சை பெறுவதற்கான அரசு மருத்துவரின் பரிந்துரைபடிவம் (referral form) இனி தேவை இல்லை. | கோவிட்-19 சிகிச்சை பெறுவதற்கான அரசு மருத்துவரின் பரிந்துரை படிவம் (referral form) தேவை இல்லை என்ற நடைமுறை தொடரும். |

iii. உயர் மட்ட குழுவால், கோவிட்-19 தொற்றுக்கான தற்போது நிர்ணயிக்கப்படும் கட்டணத்துடன் நாளொன்றுக்கு பாதுகாப்பு கவசம் (தமிழ்நாடு மருத்துவ சேவை நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்டது) தரமான உணவு மற்றும் கிருமி நாசினி உட்பட கூடுதலாக கட்டணம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படும்.

| **வகை** | **கோவிட்-19 சிகிச்சை விபரங்கள்** | **நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூடுதல் சிகிச்சை கட்டணம் (ரூபாய்)** |
|---|---|---|
| 1 | தீவிரமில்லாத ஆக்ஸிஜன் அல்லாத படுக்கை வசதி | 1,000 |
| 2 | தீவிரமில்லாத ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதி | 1,000 |
| 3 | வெண்டிலெட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை | 3,500 |
| 4 | வெண்டிலெட்டர் இல்லாத தீவிர சிகிச்சை | 1,500 |
| 5 | ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு மட்டும் | 1,500 |

iv. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் தனியார் மருத்துவமனைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுமக்களுக்கான கோவிட்-19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

**தனியார் மருத்துவமனைகளில் பொது மக்களுக்கான கோவிட் 19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம்**

| வ. எண் | கோவிட்-19 சிகிச்சை விபரங்கள் | நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்படும் கட்டணம் [பாதுகாப்பு கவசம் தரமான உணவு மற்றும் கிருமி நாசினி உள்பட] (ரூபாய்) |
|---|---|---|
| 1. | தீவிரமில்லாத ஆக்ஸிஜன் அல்லாத படுக்கை வசதி | ரூ.3,000/- |
| 2. | தீவிரமில்லாத ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதி | ரூ.7,000/- |
| 3. | வென்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை | ரூ.15,000/- |
| 4. | தீவிர சிகிச்சை பிரிவில் ஊடுருவாத வென்டிலேட்டர் வசதி வென்டிலேட்டர் (Non-invasive ventilation) (CPAP / Bi-PAP) | ரூ.15,000/- |
| 5. | ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு மட்டும், (ICU with O2 only as stepping down) | ரூ.7,000/- |

v. தனியார் மருத்துவமனைகளின் செயல்திறன் மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் வழங்கப்பட்ட இரண்டு மாதங்களுக்கு பிறகு ஆய்வு செய்யப்பட்டு உயர்மட்ட குழுவின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. இந்த அரசாணை நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அலுவலக எண்.2324/FS/P/2021, நாள்: 20/07/2021-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்.**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை-6.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை-6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை-6.

மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை-8.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 18.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.
<u>நகல்</u>:
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை-9.
நிதி (சுகாதாரம்-2) துறை, சென்னை-9.
அனைத்துத் துறைகள், சென்னை-9.
மருத்துவம் மற்றும் குடும்ப நலத் (தகவுப் பிரிவு / அனைத்து பிரிவுகள்)
துறை, சென்னை – 9.
இ.கோ/ந.கோ

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

இரா. சுலோச்சனா
9.8.2021
பிரிவு அலுவலர்

9.8.21